**தேயிலை ஆராய்ச்சிச் சபை - 2013**

தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்)**

(அ) எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் - 07

(i) காணிகள் மற்றும் கட்டிடங்கள் தனித்தனியான சொத்துக்களாக உள்ளதுடன் தனித்தனியாக கணக்கிடப்பட்டுள்ள போதிலும் சபையானது அவற்றினை தனித்தனியாக காட்டுவதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 201.14 மில்லியன் தொகையான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி சேர்த்து காட்டியிருந்தது.

(ii) நியமத்திற்கமைய ரூபா 158.20 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் பேரேட்டு கணக்குகளில் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்களின் பெறுமதி நீண்டகாலமாக முற்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கொழும்பில் இரசாயன ஆய்வுகூடத்திலுள்ள ரூபா 662,077 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொழும்பில் அவ்வாறானதொரு ஆய்வுகூடம் இன்மையால் பௌதீக ரீதியாக இணங்கானப்பட முடியாமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

மேலும், நிறுவனமானது 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்தாக அலகாக உள்ளதுடன் அதன் சொத்துக்களும் மிகவும் பழமைவாய்ந்துள்ளதாக தலைமை அலுவலகம் தலவாக்கலை, 5 உப நிலையங்கள், இரண்டு தோட்டங்கள் மற்றும் பல ஏனைய உத்தியோகத்தர் விடுதிகள் என்பவற்றில் உள்ளது. அத்தகையவாறு பெருமளவு சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன் பூச்சியப் பெறுமதியில் கணக்குகளில் காணப்படுகின்றது. பூச்சியப் பெறுமதியில் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் இனங்காணப்பட்டிருந்தது. மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மீள்மதிப்பாய்வு எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நடைமுறை பெருமளவுக்கு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது என சபையின் தலைவர் 2014 செப்தெம்பர் 01 இல் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் - 09

பொருளிருப்புக்கள் வழமைபோல் மாறாக தேறிய தேறக்கூடிய பெறுமதிக்கு பதிவழிக்கப்பட்டுள்ள போதிலும் பயன்படுத்த முடியாதிருந்த தேயிலை ஆராய்ச்சி விஞ்ஞான இருப்புக்கள் தேறிய தேறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடாமல் 2005 இலிருந்து புத்தகத்தில் ரூபா 302,893 கிரயத்தில் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

அபிவிருத்திச் செலவினம் மீதான கணக்கீட்டுக் கொள்கை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை சிறுநில உடமையாளர் துறை செயற்திட்டத்தில் தேயிலை அறுவடையின் பொறிமுறையின் கீழ் பயிற்சியாளர்களின் பயிற்சிக்காக சபையின் தாழ்நில பிரதேச அலுவலகம் மற்றும் தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தருக்கு ரூபா 800,000 மற்றும் ரூபா 1,000,000 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளதாக கருதி செயற்பாட்டிலுள்ள செயற்திட்ட முற்பணத்திற்கு வரவுவைக்காமல் மீளாய்வாண்டு இறுதியில் முழுவதும் நடைபெறும் வேலைக்கு வரவுவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1979 முதல் 1982 வரையான காலத்தின் போது இலங்கையில் தேயிலை செயற்பாட்டின் பொருத்தப்பாட்டினை பரீட்சிப்பதற்கு 1982 ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் வேலையின் கீழ் ரூபா 4,142,173 தொகை காட்டப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அந்த நாட்களின் போது இலங்கையில் தேயிலை உற்பத்தி செயற்பாட்டிற்காக பொருத்தமற்ற இயந்திரத்தை கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

தேயிலை சிறுநில உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை தேயிலைச் சபை என்பவற்றிலிருந்து பெறவேண்டியவையாக முறையே ரூபா 30,459 மற்றும் ரூபா 1,972,668 ஆன தொகைகள் காட்டப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் சபைக்கு செலுத்த வேண்டியதாக எந்தவொரு தொகைகளும் மீளாய்வாண்டு இறுதியில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 பெற வேண்டிய மறறும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகம் தொடர்பில் ரூபா 232,386 தொகையான ஏனைய கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

(ஆ) ஐந்து அண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருக்கின்ற ரூபா 697,663 மொத்தமான சென் கூம்பஸ் தோட்டத்தின் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவ. தானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 177(1) மற்றும் (3) | சென் கூம்பஸ் தோட்டம் மற்றும் சென் ஜேச்சிம் தோட்டத்தால் மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட முறையே ரூபா 3,616,770 மற்றும் ரூபா 1,538,515 தொகையான நாளாந்த சேகரிப்புகள் நாளாந்தம் அல்லது விரைவான சாத்திமான காலப்பகுதியில் வங்கியில் இடப்பட்டிருக்காததுடன் அந்த சேகரிப்புக்களில் சில அன்றாட செலவினங்களை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(சீ) | (i) முற்பணங்கள் வழங்கப்பட்டதற்கான நோக்கங்கள் பூர்த்தியான பின்னர் மூன்று மாதங்களை விட அதிகமாக ரூபா 280,198 தொகையான முற்பணங்களின் தீர்ப்பனவு தாமதப்பட்டிருந்தது.<br>(ii) சென் கூம்பஸ் தொழிற்சாலையால் வழங்கப்பட்ட ரூபா 15,267 தொகையான காசு முற்பணங்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆம்திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, நிலையான சொத்துக்களின் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 28.68 மில்லியன் தேறிய தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 23.42 மில்லியன் பற்றாக்குறையை விளைவித்திருந்தது, ஆதலால், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 5.26 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. இந்த அதிகரிப்புக்கு ரூபா 18.66 மில்லியனால் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமையே பிரதானமாக இருந்தது. மேலும், இரண்டு தோட்டங்களிலிருந்தான இலாபங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 8.41 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

## 3.2. செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 தோட்டங்களின் செயற்பாட்டு விளைவுகள்

சபையின் கீழ் சென் கூம்பஸ் தோட்டம் மற்றும் சென் ஜோசியம் என்ற பெயர்களில் இரண்டு தோட்டங்கள் இரண்டு தொழிற்சாலைகளின் கீழ் தொழிற்படுகின்றதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் கீழே தரப்படுகின்றன.

| | சென் கூம்பஸ் தோட்டம் | | சென் ஜோசிம் தோட்டம் | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| தேயிலை விற்பனைகள் | | | | |
| விற்பனைப் பெறுமதி | 183,877 | 173,875 | 138,729 | 111,773 |
| ஏனைய வருமானம் | 2,103 | 2,356 | 19,557 | 15,524 |
| மொத்த வருமானம் | 185,980 | 176,231 | 158,286 | 127,297 |
| கழி : | | | | |
| மொத்தச் செலவினம் | (179,510) | (153,263) | (159,177) | (135,021) |
| செயற்பாட்டு இலாபம் /(நட்டம்) | 6,470 | 22,968 | (891) | (7724) |
| முன்னைய ஆண்டுச் சீராக்கல் | (32) | (335) | (187) | (1,141) |
| தேறிய செயற்பாட்டு இலாபம் /(நட்டம்) | 6,438 | 22,633 | (1,078) | (8,865) |
| விற்பனைகள் (கிலோகிராம்கள்) | 374,098 | 376,712 | 297,899 | 283,065 |
| தேயிலையின் ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திக் கிரயம் (ரூபா) | 473.21 | 411.49 | 455.89 | 405.25 |
| ஒரு ஹெட்டயருக்கான விளைச்சல் | 2,400 | 2,293 | 1,746 | 774 |
| சராசரி தேறிய விறபனைகள் (1 கிலோகிராமிற்கான ரூபா) | 485.05 | 455.29 | 458.62 | 388.37 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சென் கூம்பஸ் தோட்டத்தின் விற்பனை அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2,614 கிலோகிராம்களால் குறைவடைந்திருந்ததுடன் விற்பனைகள் ரூபா 10 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு இலாபம் ரூபா 16.5 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 14,834 கிலோ கிராமினால் தேயிலை விற்பனைகள் அதிகரித்ததன் விளைவால் சென் ஜோக்சிம்ஸ் தோட்டத்தின் செயற்பாட்டு நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 6.8 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

(இ) சென் ஜோக்சிம்ஸ் தோட்ட கணக்ககளின் பிரகாரம், தொழிற்சாலையிலிருந்து ரூபா 1.49 மில்லியன் இலாபம் உழைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தேயிலை தோட்டத்திலிருந்து ரூபா 4.9 மில்லியன் நட்டமொன்று விளைவித்திருந்தது. தேயிலை புத்தகத்தின் பிரகாரம், 211,045 கிலோ கிராம்கள் பச்சை தேயிலை இலை தோட்டத்திலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தேயிலை இலை வழங்குநர்களிடமிருந்து 1,200,527 கிலோகிராம்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தேயிலைத் தோட்டத்தின் வெற்றிடப் பகுதிகளை நிரப்பும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தால் சிறந்த அறுவடை பெறப்பட்டிருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஏடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு 329,796 வெற்றிட தாவரங்கள் உள்ளன. இறப்பர் பயிர்ச்செய்கையிலிருந்து ரூபா 1.3 மில்லியன் இலாபம் பெறப்பட்டிருந்த போதிலும் 8.74 ஹெெடெயர் நெற் காணியில் பயிச்செய்த 35 குடியிருப்பு பயிற்செய்கையாளர்கள் வருமானம் எதையும் உழைத்திருக்கவில்லை.

(ஈ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், இரண்டு தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களின் தேயிலை உற்பத்தி இயலளவு ஒரு நாளிற்கு முறையே 10,000 கிலோகிராம்கள் மற்றும் 15,810 கிலோகிராம்களாக இருந்தது. எவ்வாறாயினும், ஒரு நாளிற்கு இயந்திரத்தினனுடைய சராசரி பயன்பாடு முறையே 4,630 கிலோகிராம்கள் (46.3 சதவீதம்) மற்றும் 3,870 கிலோகிராம்கள் (24 சதவீதம்) ஆக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 4. செயலாற்றல மீளாய்வு

### 4.1. ஆராய்ச்சி நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை | | நிதிமுன்னேற்றம் சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | | மூலதனம் | மீண்டெழும் | மூலதனம் | மீண்டெழும் |
| | | ரூபா மில் | ரூபா மில் | | |
| i | பயிர்ச்செய்கை முன்னேற்றம் | 11.50 | 12.89 | 64.70 | 96.97 |
| ii | காணி உற்பத்தித் திறன் முன்னேற்றம் | 8.81 | 21.86 | 71.96 | 106.31 |
| iii | காலநிலை மாற்றங்கள், மாற்றியமைத்தல் மற்றும் குறைத்தல் தந்திரோபாயங்கள் | 1.54 | 2.11 | 77.92 | 101.90 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| iv | கள நடைமுறையின் பொறிமுறைப்படுத்தல் | 0.03 | 1.84 | 33.33 | 135.33 |
| v | நாற்றுமேடை முகாமைத்துவ தொழில்நுட்பங்கள் | 0.52 | 0.98 | 90.38 | 185.71 |
| vi | பயிர்ச்செய்கை முகாமைத்துவம் | 5.67 | 11.77 | 53.26 | 91.33 |
| vii | தேயிலை செயன்முறைப்படுத்தல் தொழில்நுட்பம் | 2.17 | 7.56 | 72.81 | 96.30 |
| viii | செய்யப்பட்ட தேயிலைத் தரம் | 0.74 | 1.83 | 6.76 | 45.36 |
| ix | தேயிலை உற்பத்தி பெறுமதி சேர்வரி | 5.97 | 3.65 | 58.29 | 41.64 |
| x | வளத் திட்டமிடல் | 0.44 | 3.00 | 29.55 | 71.67 |
| xi | சோதனை நெறிமுறை முன்னேற்றங்கள் | 0.02 | 0.72 | 50.00 | 04.17 |
| xii | தொழில்நுட்பம் பரப்புதல் | 2.28 | 11.46 | 35.09 | 88.39 |
| xiii | பங்குதாரர்களிற்கான சேவை | 2.16 | 15.18 | 64.81 | 76.61 |
| xiv | ஆராய்ச்சி முகாமைத்துவம் | 7.34 | 14.80 | 70.44 | 125.88 |
| xv | உள்ளக சேவை மற்றும் பராமரிப்பு | 30.81 | 181.35 | 67.22 | 102.97 |
| | மொத்தம் | 80.00 | 291.00 | 64.76 | 100.30 |

(ஆ) தேயிலை சிறுநில உடமையாளர்களறிகு இடையில் தேயிலை அறுவடை செய்தல் மற்றும் கொழுந்து நறுக்குதல் இயந்திரங்களை பிரபலப்படுத்துவதற்கு விசேட செயற்திட்டமொன்று தொடங்கப்பட்டிருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக அரசாங்கத்தால் ரூபா 100 மில்லியன் தொகை அனுமதிக்கப்பட்டிருந்தது. இது அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் தேயிலை சிறுநில உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலை சிறுநில உடமையாளர் சங்கம், தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் இலங்கை தேயிலைச் சபை என்பவற்றுடன் இணைந்து சபையால் தொடங்கப்பட்டது. ஆரம்ப ஒதுக்கீடு ரூபா 20 மில்லியன் 2013 ஆம் ஆண்டின் இறுதி பகுதியில் பெறப்பட்டிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2.5 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சென் ஜோக்சிம் தோட்டத்தின் 143.810 ஹெக்டயர் பரப்புள்ள மொத்தக் காணியில், 17.675 ஹெட்டயர்கள் நீண்டகாலமாக வெளித்தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களால் நிரந்தர வீடுகள் நிர்மானிக்கப்பட்டிருந்ததுடன் நெல், தேயிலை, தென்னை மற்றும் வேறு வகை பயிர்கள் போன்றவற்றினை பயிர்செய்திருந்தனர். ஆகவே, தோட்டம் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளிலிருந்து வருமானத்தினை இழந்திருந்ததுடன் 2014 மார்ச் 31 வரை காணிகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அந்த 17.675 ஹெக்டயர் பரப்புள்ள காணியில் 8.74 ஹெக்டயர் நெற்காணிகள் 1963 ஆம் ஆண்டில் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்திற்கு சென் ஜோக்சிம் சுவீகரிப்பதற்கு முன்னர் 35 குடியிருப்பு பயிர்ச் செய்கையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. மிகுதி காணி ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. தோட்டம் இரத்தினபுரி கொவி ஜனசேவா நிலையத்தின் ஊடாக குடியிருப்பு பயிர்ச்செய்கையாளர்களின் பங்குடமையை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. தோட்டம் ஆக்கிரமிப்பார்களிற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த ஆக்கிரமிப்பாளர்கள் 25 ஆண்டுகளிற்கு மேலாக இடத்தை எடுத்திருந்தனர் என சபையின் தலைவர் 2014 செப்தெம்பர் 01 இல் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) 165 உத்தியோகத்தர் விடுதிகளில் 38 விடுதிகள் மீளாய்வாண்டு இறுதிவரை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக பயனற்று இருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.3 நிதிகளின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கு 2013 ஒக்தோபரில் பொதுத் திறைசேரியால் ரூபா 6,000,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்புபட்ட நடவடிக்கைகளை 2014 ஏப்ரல் 23 மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைத் திகதிவரையும் தொடங்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் நடைபெறும் வேலையில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆலோசனை மற்றும் விளம்பரச் செலவினமாக ரூபா 261,680 மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கொள்வனவு திட்டத்தின் பிரகாரம், தெனிஓயாவில் சீ வகையான விடுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் அலுவலக கட்டிடத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் கொட்டாவாவில் இரட்டை விதிகளின் நிர்மாணம் தலவாக்கொல்லையில் தொழிலாளர் ஓய்வு அறைகள் மற்றும் கழிப்பறைகளின் நிர்மாணம் மற்றும் பாசறையில் நீர்வழங்கல் என்பன பொதுத் திறைசேரியால் ரூபா 9,321,000 தொகையான நிதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2014 மே 31 ஆன கணக்காய்வு திகதிவரையும் திட்டத்தின் பிரகாரம் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயற்திட்ட முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 முதல் 2008 வரையான காலத்தின் போது மண் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக மெத்தில் இரசாயன செயற்திட்டத்திடமிருந்து (எம்ஈபீஆர் செயற்திட்டம்) பெறப்பட்ட ரூபா ரூபா 9,608,752 தொகையான நிதிகளில் மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 8,179,693 தொகை மாத்திரம்

செலவழிக்கப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2010 மார்ச் 30 இல் செயற்திட்ட காலம் காலாவதியாகியிருந்த போதிலும் ரூபா 1,429,059 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேயிலை தொழிற்சாலை கற்கைகள் மீது செயற்திட்டத்தின் கீழ் ரூபா 187,452 தொகையான மிகுதி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிக்கப்பட்ட ஆளணி மற்றும் உள்ளபடியான ஆளணி முறையே 443 மற்றும் 236 ஆக இருந்தது. 04 பிரதிப் பணிப்பாளர்கள், 05 பிரிவுத் தலைவர்கள் மற்றும் 14 அதிபர் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 207 வெற்றிடங்கள் உள்ளன. 2011 ஆம் ஆண்டிலிருந்து அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சென் கூம்பஸ் மற்றும் சென் ஜோக்சிம் அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்படியான ஆளணியில் சேகரிப்பு உடன்படிக்கையின் கீழ் வேலைசெய்பவர்கள் முறையே 42 மற்றும் 31 ஆக இருந்தது.

(இ) திறைசேரியிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் 06 பொறுப்புடைய அதிகாரிகளிற்கு மாதாந்தம் ரூபா 3,000 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது. சபையின் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் பொறுப்புடைய அதிகாரிகளின் பதவி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) பணிப்பாளர் சபை அவர்களுடைய பதவியணியினருடைய விடுதிகளின் பராமரிப்பிற்காக பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் பிராந்திய பொறுப்பு உத்தியோகத்தர்கள் என்போருக்கு தொழில் படிகள் மாதாந்தம் மீளளிப்பதற்கு 2007 மே 24 இல் அனுமதித்திருந்தது. எவ்வாறாயினும், உற்பத்தி மணித்தியாலங்கள், மேலதிக நேர வருகைப் படி போன்ற உள்ளடங்கலான தொழிலாளர் கூலி அடிப்படையில் இந்த படிகள் கணிப்பிடப்பட்டதுடன் வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது சபையால் ரூபா 2,717,945 மொத்தமான தொகைகள் மீளளிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அமைச்சு மற்றும் திறைசேரியின் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை, இந்த கொடுப்பனவு 2015 சனவரி 01 இலிருந்து நிறுத்தப்படும் என 2014 செப்தெம்பர் 01 இல் சபையின் தலைவர் எனக்கு தெரிவித்திருந்தார்.

(உ) 1995 இன் நிர்வாக நடைமுறைக் கைநூலின் பிரகாரம் சபையின் உத்தியோகத்தர்களிற்கு வேறு ஒரே வகை ஆராய்ச்சி நிறுவனங்களை விட பின்வரும் வேறு உரிமைகள் வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(i) விடுமுறை

| | அமைய | விடுமுறை | மருத்துவ | மொத்தம் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட தரம் | 11 | 22 | 30 | 63 |
| கனிஷ்ட தரம் | 5 1/2 | 22 | 30 | 57 1/2 |
| சிற்றூழியர் தரம் | 5 1/2 | 16 1/2 | 30 | 52 |

(ii) தலவாக்லையிலுள்ள விடுதிகள் மற்றும் உப அலுவலகங்களில் வசிக்கின்ற பதவியணியினருக்கான மின்சார ஒதுக்கீடுகள்

| | |
|---|---|
| தரம் I | 300 அலகுகள் |
| தரம் II | 225 அலகுகள் |
| தரம் III - V | 150 அலகுகள் |
| தரம் VI | 100 அலகுகள் |

ஒரேவகை அமைப்புக்களிற்காக பொருத்தமுடைய தற்போதைய விதிகள் மற்றும் பிரமாணங்களை பொருத்துவதற்கும் சபையின் நிர்வாக நடைமுறைக் கைநூலை பிரமாணப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் சபையானது அவசியமான மாற்றங்கள் திருத்தங்களை செய்யும் நோக்கில் இருக்கின்ற சுற்றறிக்கையின் பிரகாரம் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் கைநூலை திருத்துவதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறைக் கைநூல் இதன்படி திருத்தப்பட்டுள்ளதென 2014 செப்தெம்பர் 01 இல் சபையின் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஊ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முழுக்கொடுப்பனவுடன் கல்வி விடுமுறை பெற்றிருந்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 27,090,600 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் கட்டாய சேவைக்காலத்தில் சேவையற்றத் தவறியிருந்தனர். அவர்கள் வேலைக்கமர்த்தப்பட்ட காலத்திற்காக அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் பணிக்கொடை ஏற்பாடுகளில் ரூபா 1,031,668 ஆன தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(எ) சென் ஜோக்சிம் தோட்டத்தில் வேலைசெய்கின்ற இரண்டு ஊழியர்களிற்கு பதவியுயர்வு மற்றும் நிரந்தர நிலை தொடர்பில் 2008 யூன் 26 ஆந் திகதிய விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஊழியர் நடுவர் தீர்ப்பு அமுலாக்கலைப் புறக்கணித்ததற்காக 2008 இல் சபைக்கு எதிராக ஊழிய ஆணையாளரால் நீதி மன்ற வழக்கு தொடரப்பட்டிருந்தது. சபையானது ஆரம்ப கட்டத்தில் தீர்வுக்கு வராமல் வழக்கை நடாத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதிவரை தனியார் சட்டத்தரணிகளிற்கு ரூபா 902,000 செலுத்தப்பட்டிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2013 பெப்ரவரியில் சபையால் வழக்கினை மீளப்பெறப்பட்டதுடன் அந்த ஊழியர்களின் சம்பளஏற்ற நிலுவைகளாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 110,393 மற்றும் 73,676 தொகைகள் செலுத்தப்பட்டது.

**4.6 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு**

(அ) சபைக்கு சொந்தமான ஆறு மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது 07 சந்தர்ப்பங்களில் விபத்திற்கு உட்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவை நிதிப் பிரமாணம் 104(2), (3), (4) என்பவற்றுக்கிணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்காததுடன் திருத்தக் கிரயங்கள் ரூபா 76,240 ஆல் காப்புறுதியாளரால் மீளளிப்புச் செய்யப்பட்டவற்றினை விஞ்சியிருந்தது.

(ஆ) இலங்கை தேயிலைச் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஆறு வாகனங்கள் சபையின் கீழ் பதிவுசெய்யப்படாமல் சபையால் பயன்படுத்தப்படுகின்றன.

**5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையில் பல முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முற்பணக் கொடுப்பனவுகளும் தீர்ப்பனவுகளும்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்
(உ) தொழிற்சாலை முகாமைத்துவம்